விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 097 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 12 புதன்கிழமை (26.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

IPL ஐ.பி.எல்
கொண்டாட்டம் – 2025




4ஆம் பக்கம் பார்க்க

## சிறீதரன் வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)

அரச அதிகாரிகளை அவமதிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறி யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தார் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.



15ஆம் பக்கம் பார்க்க

## அதிகம் கதைத்தால் உங்கள் ஊழலை வெளிப்படுத்துவேன்

### சிவஞானத்தைப் பார்த்து விழித்தார் அர்ச்சுனா

(யாழ்ப்பாணம்)

இது உங்கள் ஆட்சி இல்லை. நீங்கள் இங்கே கதைக்கக்கூடாது. வடக்கு மாகாண சபையை அழித்த நீங்கள் இங்கே கதைக்க வேண்டாம். அதிகம் கதைத்தால் உங்கள் ஊழலையும் வெளிப்படுத்துவேன் என பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, வட மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தைப் பார்த்து விழித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

## களேபரமானது கச்சேரி

# நிறுத்தப்பட்டது யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம்

### கூக்குரல், கொச்சை வார்த்தைகள், குழப்பங்கள் தாராளம்



(யாழ்ப்பாணம்)

கூக்குரல், கொச்சை வார்த்தைகள், குழப்பங்களால் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் தொடர முடியாமல் இடைநடுவே நிறுத்தப்பட்டது.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகிய அபிவிருத்திக் குழுக் கூட்டம் தொடக்கம் சுமுகமான முறை

15ஆம் பக்கம் பார்க்க

## வியாழேந்திரன் கைதாகி விளக்கமறியலில்


(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின

15ஆம் பக்கம் பார்க்க

## மகாதேவக்குருக்கள் சிவபதமடைந்தார்



15ஆம் பக்கம் பார்க்க

## அதிகளவான போதைப் பாவனை யாழில் இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

அளவுக்கு அதிகமான போதைப்பொருள் பாவனை காரணமாக யாழில் இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞன் ஒருவரே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் கடந்த ஞாயிற்றுக்கிழமை(23) நண்பர் வீட்டில் படுத்திருந்ததாகவும் திங்கட்கிழமை (24) அதிகாலை அவர் மயங்கிய நிலையில் இருந்துள்ளார்.

உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர்ஏற்கனவே

15ஆம் பக்கம் பார்க்க

## "அடேய்" நான் கூறுவது புரியவில்லையா?

### அர்ச்சுனா எம்.பியை ஒருமையில் விழித்த அமைச்சர் சந்திரசேகர்



(யாழ்ப்பாணம்)

"அடேய்" நான் கூறுவது புரியவில்லையா? என அர்ச்சுனா எம்.பியைப் பார்த்து கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் ஒருமையில் விழித்தமையால் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமை

16ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் கிணற்றிலிருந்து யுவதியின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் கிணற்றிலிருந்து இளம் யுவதி ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் வவுனியா கலாபோகஸ்வேவப் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இளம் யுவதியே மரணமடைந்தவராவார்.

வவுனியா, கலாபோகஸ்வேவ பகுதியிலுள்ள கிணறு ஒன்றில் பெண் ஒருவரின்

15ஆம் பக்கம் பார்க்க

## ஊர்காவற்துறையில் இ.போ.ச பஸ் மோதியதில் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறையில் இலங்கைப்போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

02ஆம் பக்கம் பார்க்க

## சம்பள அதிகரிப்பு 10/2025 சுற்றறிக்கை வெளியாகியது

(கொழும்பு)

2025 வரவு செலவுத் திட்டப்படி அரசாங்க ஊழியர்களின் சம்பள மாற்ற அறிவுறுத்தல் தொடர்பான 10/2025ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் ஒப்பத்துடன் நேற்று (25) மாலை வெளியிடப்பட்டது.


இதன்படி அரசாங்க ஊழியர்களுக்கு ஏப்ரல் 10ஆம் திகதி அதிகரித்த சம்பளம் கிடைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## முதலாம் ஆண்டு சிரார்த்ததின அழைப்பு



கடந்த 05.04.2024 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் பூதத்தம்பி குமரகுரு (கிளி)

எமது குடும்பத்தில் முதல் தோன்றிய விடிவெள்ளி
தனக்காக வாழாமல் உன் உறவுகளுக்காய்
இரவும் பகலும் உழைத்து ஓய்ந்து போய்
இறுதியில் எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
அவசர அவசரமாய் இறைவனடி சேர்ந்து
இன்றுடன் ஒரு வருடம் ஆகிறது.
எத்தனை துறைகளில் திறமை படைத்த நீ
காலனை வெற்றிகொள்ள முடியாமல் போனது ஏன்?
உன் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அவர்களின் முதலாம் ஆண்டு சிரார்த்ததின நிகழ்வு இன்று (26.03.2025) புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(959)


கரவத்தனை, கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை இராசகுரு

(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்– கரவெட்டி)



பிறப்பு 13.09.1946 இறப்பு 25.03.2025

பொலிகண்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை இராசகுரு நேற்று (25.03.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சின்னப்பொன்னு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராஜா - தங்கப்பொன்னு தம்பதியரின் பாசமிகு மருமகனும் இராஜேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் பிரகலாதன் (ஆசிரியர் - யா/கம்பர்மலை வித்தியாலயம்), சுரேஸ்கலாதன் (உதவி அஞ்சல் அதிபர், அஞ்சல் அலுவலகம் - கரவெட்டி), சசிகலாதன் (அஞ்சல் உதவியாளர், அஞ்சல் அலுவலகம் - வல்வெட்டித்துறை), சசிகலா, சுசிகலா (ஆசிரியர் - கொ/இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவாஜினி, ஜெகதீஸ்வரி (ஆசிரியர் - யா/வல்வை RCTMS), இராஜலோஜினி (ஆசிரியர் - யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), துஷ்யந்தன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், விசேட கல்விப் பிரிவு - கல்வி அமைச்சு) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஸ்தூரி, அபிலாஸ், விஷ்ணுகா, கம்சனா, ஹரிகேஷ், ரிதுஷாந், விதேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான திருப்பதிராஜா, யோகநாதன் மற்றும் சுப்பிரமணியம், இராஜலஷ்மி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2025) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் காலை 7 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொலிகண்டி கிழக்கு,
பொலிகண்டி.

(C-2540)

தகவல் :
குடும்பத்தினர்


### பிரதேச ரீதியாக இளையோருக்கான வேலைவாய்ப்பு

மாதாந்தம் 30,000 தொடக்கம் 90,000
நேர்முகத் தேர்வு : 29.03.2025
மாலை 3.30 மணி தொடக்கம்
ஸ்ரான்லி வீதியில் கீல்ஸ் முன்புறம்
தொடர்புகளுக்கு
077 651 0375
(3753)

### வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு தகைமை அல்லது விருப்பம் உடையவர்கள் தேவை.
சமையல் உதவியாளர்
ஆண், பெண் இருபாலாரும்
இன்றே அழையுங்கள்
தொடர்பு : 077 729 2840
(3756)

### உடனடி விற்பனைக்கு

பலாலி றோட் உரும்பிராய்ப் பகுதியில் கடை விற்பனைக்கு உள்ளது. 16 அடி அகலம் 37 அடி நீளமான கடையும், 12 அடி அகலமான 37 அடி நீளமான கடையும் உடனடியாக விற்பனைக்கு உள்ளது.
077 151 0027, 077 123 5307
(3754)

### வைத்தியம்

வலிப்பு நோய்|கை விறைப்பு| நாட்பட்ட தலைவலி|
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு|
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(960)


### இ.போ.ச...

இதில் ஊர்காவற்துறை புளியங்கூடல் தெற்கைச் சேர்ந்த குருசாமி கணேசலிங்கம்(வயது 82) என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த நபர் கடந்த சனிக்கிழமை(23) முற்பகல் மோட்டார் சைக்கிளில் ஊர்காவற்துறை பாலக்காட்டு நாற் சந்தையைக் கடக்க முற்பட்ட போது இ.போ.ச பேருந்து அவரை மோதியது.

இதில் படுகாயங்களுக்கு உள்ளான மேற்படி நபர் ஊர்காவற்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (25) காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 25.02.2025 அன்று சிவபதம் அடைந்த
எமது குடும்பத்தின் குலவிளக்கு

### அமரர் சிவப்பிரகாசம் பரிமளம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 27.03.2025 வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அந் நிகழ்விலும், தொடர்ந்து எமது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(C-2539)

கவில், புலோலி தென்மேற்கு,
புலோலி.

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம்

## விரைவில் மீனவர்களிடம் கையளிக்கப்படும்

### கடற்றொழில் அமைச்சர் உறுதி

(யாழ்ப்பாணம்)

**மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் விரைவில் மீனவர்களிடம் கையளிக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் உறுதிபடத் தெரிவித்தார்.**

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பங்குகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா மயிலிட்டி துறைமுகத்தை படையினரிடமிருந்து மீட்டு மீனவர்களிடம் கையளிக்க வேண்டும் எனக் கோரியிருந்தார்.

அதற்கு பதிலளித்த கடற்றொழில் அமைச்சர் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளே மயிலிட்டி துறை முகத்தில் தரித்து நிற்கிறது.

மிக விரைவில் இவை அனைத்தும் அகற்றப்பட்டு எமது மீனவர்களிடம் பாவனைக்காக மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் அவர்களிடமே கையளிக்கப்படும் என உறுதியளித்தார். (க-நி-6-8)



## மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சமூக நடவடிக்கை மையம் நடத்தும் மகளிர் தின நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை யாழ்.இராமநாதன் வீதியில் உள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக டோக்கியோ ககுஷீயின் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற ஆராய்ச்சி பேராசிரியர் கலாநிதி திருமதி.மனோன்மணி சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் ராஜேந்திரா சுரேந்திரகுமார் மற்றும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.யுனிசெப் குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரி திருமதி.சதீஸ் ஷர்மினி, யாழ்.மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.கிரிதரன் தயாபரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8)

## மழைநீர் சேகரிப்புத் திட்டம் 50 பயனாளிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

2025 ஆம் ஆண்டிற்கான மழைநீர் சேகரிப்புத்திட்டம் தொடர்பில் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சினால் 10 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 50 மழைநீர் தாங்கிகளை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் யாழ். அரசாங்க அதிபரினால் மேற்குறித்த திட்டம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 6, வேலணை பிரதேச செயலர் பிரிவில் 5, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 6, காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 10, நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 3, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 3, சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 5, உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 3, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 3, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 3, கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 3 என 10 பிரதேச செயலர் பிரிவுகளில் மொத்தம் 50 மழைநீர் தாங்கிகளை அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (க-நி-6-8)

## அபிவிருத்திக்குழுக் கூட்டத்திற்கு வரும்போது அதிகாரிகள் தரவுகளை எடுத்து வரவேண்டும்

### கடற்றொழில் அமைச்சர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திக்குழு கூட்டங்களுக்கு அதிகாரிகள் வரும் போது போதிய தரவுகளை எடுத்து வர வேண்டும். இல்லையேல் அது தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தி விடும் என கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று செவ்வாய் கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் கருத்துரைக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாலியாற்றுக் குடிநீர்த்திட்டம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்ட விடயத்தைச் சுட்டிக் காட்டினார்.

அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் பங்கேற்கும் ஒவ்வொரு அதிகாரிகளும் தங்கள் துறை சார்ந்து தங்கள் திட்டங்களை தரவுகளாகக் குறிப்பெடுத்துக் கொண்டுவர வேண்டும். அதுவே கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் வழங்க சுலபமாக இருக்கும். இல்லையேல் அது தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தி விடும். எனவே இனி வரும் காலங்களில் அதிகாரிகள் அனைவரும் இது விடயத்தில் அதிக கவனம் எடுக்க வேண்டும் எனத்தெரிவித்தார். (க-நி-6-8)

## தீவக அபிவிருத்தி தொடர்பில்

### பிரதேச செயலர்கள் கவனம் செலுத்த வேண்டும்

### அபிவிருத்திக்குழுத் தலைவர் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

தீவக அபிவிருத்தி தொடர்பில், தீவக பிரதேச செயலர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் கோரிக்கை விடுத்தார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் மண்டைதீவு, அல்லைப்பிட்டி இணைப்பு வீதி புனரமைப்பு தொடர்பில் பேசப்பட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவக அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கம் அதிக அக்கறை செலுத்தியுள்ளது. தீவக அபிவிருத்தி தொடர்பில் அப்பகுதி பிரதேச செயலர்கள் கவனம் செலுத்த வேண்டும். அபிவிருத்தித் திட்டங்களை அடையாளம் கண்டு அதை அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முன்மொழிந்தால் அத்திட்டம் துரிதமாக நிறைவேற்றப்படும்.

எனவே தீவக பிரதேச செயலர்கள் இது தொடர்பில் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என அமைச்சர் கோரிக்கை முன்வைத்தார். (க-நி-6-8)

## கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு வடமாகாணம் அநீதி இழைத்துள்ளது

### இலங்கை பதில் அதிபர் சங்கம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற பதில் அதிபர்கள் இன்னமும் அதிபர் சேவைக்கு உட்படுத்தப்படாமை கவலைக்குரிய விடயமாகும் என இலங்கை பதில் அதிபர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்.ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மூன்று வருடங்களுக்குக் குறையாத சேவையை வழங்கிய பதில் அதிபர்களுக்கு அதிபர் தரம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கையை கல்வி அமைச்சு ஏற்கனவே எடுத்துள்ளது.

எனினும் வடமாகாணத்தில் மாத்திரம் பத்து வருடங்களுக்கு மேலாக, கடமை நிறைவேற்று அதிபர்களாக இருந்தவர்களைக் கூட, நீக்கி அவர்களின் இடங்களுக்குப் புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் ஏனைய மாகாணங்கள் அவ்வாறு செய்யவில்லை. அந்த மாகாணங்கள் மூன்று வருடங்களுக்குக் குறைவான சேவையையுடைய கடமை நிறைவேற்று அதிபர்களை மாத்திரமே அப்பதவி யிலிருந்து நீக்கி, புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளின் பொறுப்புக்கள் இப்போதும் பதில் அதிபர்களிடமே இருக்கின்றன.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், பதில் அதிபர்களாக இருந்தவர்களை மீளவும் ஆசிரியர் பணிக்குத் திரும்புமாறு கேட்பது அவர்களை உளவியல் ரீதியாக பாதிக்கச் செய்யும்.

இதை விட, பதில் அதிபர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பலர் தமது சேவை முடிவடைவதற்கு முன்னதாக ஓய்வு பெற்றுச் செல்லுகின்ற துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் கல்வி வளர்ச்சியில் பதில் அதிபர்கள் மிக முக்கிய பங்கினை வழங்கியிருக்கிறார்கள் என்பதனை எவரும் மறந்து விடக் கூடாது.

அத்துடன் 2016, 2027 ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கு அமைய ஒரு பாடசாலையில் பொறுப்பாக இருக்கும் அதிபர் அல்லது பதில் அதிபருக்கு மேலதிக கொடுப்பனவாக 2500, 4000, 6000 ரூபாய் பாடசாலையின் தரத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகிறது.

இருந்தும் வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணங்கள் இக் கொடுப்பனவுகளை வழங்கவில்லை.

இவை தொடர்பில் அண்மையில் கல்வி அமைச்சர், பிரதிக் கல்வி அமைச்சர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினோம். இதற்கு விரைவில் தீர்வு பெற்றுத் தருவதாக அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

இதேவேளை வடமாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் தொடர்பில் வடக்கு ஆளுநர், பிரதம செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரை இலங்கைப் பதில் அதிபர் சங்கம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-8)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மனோஜ் பாரதிராஜா காலமானார்




இயக்குநர் பாரதிராஜாவின் மகன் மனோஜ் பாரதிராஜா (வயது - 48) மாரடைப்புக் காரணமாக நேற்று செவ்வாய்க்கிழமை மாலை காலமானார்.

மனோஜ் பாரதிராஜாவுக்கு சமீபத்தில் இதய அறுவை சிகிச்சை நடந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-7)

# பஞ்சாப் கிங்ஸ் வெற்றி

## போராடி வீழ்ந்தது குஜராத்



குஜராத் அணிக்கு எதிரான பிரிமியர் போட்டியில் பஞ்சாப் அணி, 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் "சிங்கம்" போல சிலிர்த்த, பஞ்சாப் அணித் தலைவர் ஷ்ரேயஸ் 42 பந்துகளில் 97 ஓட்டங்கள் குவித்து வெற்றிக்கு அடிக்கோலினார்.

அகமதாபாத்தில் நேற்று நடந்த பிரிமியர் லீக் போட்டியில் குஜராத் - பஞ்சாப் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணித் தலைவர் சுப்மன் கில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 243 ஓட்டங்களைக் குவித்தது. ஷ்ரேயஸ் (97), ஷஷாங்க் (44 ரன், 16 பந்து) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கடின இலக்கைத் துரத்திய குஜராத் அணிக்கு சாய் சுதர்சன், சுப்மன் கில் ஜோடி சுப்பர் ஆரம்பம் வழங்கியது. 5.5 ஓவர்களில் 61 ஓட்டங்கள் சேர்த்த போது, சுப்மன் (33 ஓட்., 14 பந்து) ஆட்டமிழந்தார். அடுத்து இணைந்த சாய் சுதர்சன், பட்லர் ஜோடி மின்னல் வேக ஓட்டக்குவிப்பை வெளிப்படுத்தியது. சாய் சுதர்சன் அரைச்சதம் எட்டினார்.

இரண்டாவது விக்கெட்டுக்கு 40 பந்துகளில் 84 ஓட்டங்கள் சேர்த்த போது, சாய் சுதர்சன் (74) ஆட்டமிழந்தார். பட்லர் (54), தன் பங்கிற்கு அரைச்சதம் கடந்தார். இவரை யான்சென் போல்டாக்க, பஞ்சாப் பக்கம் வெற்றி திரும்பியது. ரூதர்போர்ட் போராடினார்.

கடைசி ஓவரில் குஜராத் வெற்றிக்கு 27 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அர்ஷ்தீப் பந்து வீசினார். முதல் பந்தில் டிவாட்யா (6), 4வது பந்தில் ரூதர்போர்ட் (46) ஆட்டமிழக்க, 15 ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட்டன. குஜராத் அணி 20 ஓவரில் 232/5 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. (ம-7)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் இரசாயனவியல் பாட ஆசிரியர் திரு.ந.கிருபாகரன் அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி நடேசு தவமலர்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகவும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(3755)

**நலன்புரிக் கழகம்**
**யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி.**

# மரண அறிவித்தல்

தோற்றம்
28 - 05 - 1953



மறைவு
25 - 03 - 2025

## சபாபதிப்பிள்ளை தங்கராசா

தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை தங்கராசா அவர்கள் நேற்று (25.03.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை (முத்து) - சிவஞானாம்பிகை தம்பதியரின் மருமகனும் நிர்மலா அவர்களின் பாசமிகு கணவரும் சியாமளா, வைகுந்தவாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் செந்தூரன், ராதிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விசுவநாதன், சிதம்பரப்பிள்ளை, இராமநாதன், வேலுப்பிள்ளை, சபாரட்ணம், புஸ்பரட்ணம் ஆகியோரின் சகோதரனும் அருளானந்தராசா (சக்கரை - லண்டன்), காலஞ்சென்ற அருந்தவராசா (சொக்கன்), காலஞ்சென்ற சந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஹவீன், நேகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2025) புதன்கிழமை பி.ப 1.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணல் வீதி, தம்பசிட்டி,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

(C-2541)

# வைகுண்டத்தில் விஷ்ணு பாதங்களையடைய

## கண்ணீர் புஷ்பங்கள்



ஏகாதசி திருவோண நட்சத்திரத்தில் வைகுண்ட பிராப்தியடைந்து ஸ்வர்க்க ஸ்ரீ ஆகிவிட்ட

"லக்ஷாத்யாயி" "மஹோபாத்யாய"
"சிவாகமஞான பானு"
**சிவஸ்ரீ தாணு. மஹாதேவக் குருக்கள்**

அன்னாரின் ஆத்மா சிவாசாயுஜ்ஜயமடைந்து விஷ்ணு பாதங்களில் சாந்தி பெற வேண்டுமென நயினை நாகம்மையையும், சுதுமலை தங்கு சங்களைத் தாய் ஸ்ரீ புவனேஸ்வரியையும் பிரார்த்தித்து அஞ்சலிக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு - I
ஸ்ரீ புவனேஸ்ரி அம்பாள் கோவில் சுதுமலை, மானிப்பாய்.

ஸ்ரீமதி.சீ.மஹேஸ்வரக் குருக்கள்,
பிரம்மஸ்ரீ ம.நதிசுதசர்மா,
சிவஸ்ரீ. கலாநிதி. ம.பாலகைலாசநாதக் குருக்கள்
சிவஸ்ரீ. ச.சர்வேஸ்வரக் குருக்கள்
குடும்பத்தவர்கள்

(C-2542)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் குருசாமி கணேசலிங்கம்

(புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும், ஓய்வுபெற்ற ஊர்காவற்துறை பிரதேசசபைச் செயலாளரும் அகில இலங்கை சமாதான நீதவானும், ஊர்காவற்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவரும், மத்தியஸ்தர் குழாம் உறுப்பினரும், ஓய்வூதிய சங்கத் தலைவரும்)

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! ஓம் சாந்தி!!!

(3757)

165, K.K.S.றோட்,
யாழ்ப்பாணம்.

வேணி களஞ்சியம்,
உரிமையாளர், முகாமையாளர் மற்றும் ஊழியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட வீதிப் புனரமைப்பிற்கு 1400 மில்லியன் நிதி ஒதுக்கீடு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

(யாழ்ப்பாணம்)

2025 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட வீதிப்புனரமைப்பிற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு 1400 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் நேற்று செவ்வாய்க் கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அபிவிருத்தி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டது.

2025 ஆம் ஆண்டில் யாழ்.மாவட்ட வீதிப்புனரமைப்புக்களுக்கு 1400 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து எமது ஆளுகைக்குட்பட்ட வீதிகளை விரைந்து புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (க-நி-6-8)

---


# இருபதாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.

## கதிர்காமு சந்திரலிங்கம்



தோற்றம் 05.03.1952 மறைவு 26.03.2005

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
ஆண்டுகள் இருபது ஆனாலும்
உம் நினைவுகள் என்றும் அழியாது
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் எம்முடன் இருப்பீர்கள்!

(C-2535)

மயூரன்ஸ் ஜுவல்லர்ஸ்
07, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

எஸ்.எஸ்.மொபைல்ஸ்
(சந்திரலிங்கம் சறோஜினி தேவி)
65,சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்...
குடும்பத்தினர்.


---

# இராசிபலன்

26.03.2025
பங்குனி 12, புதன்கிழமை
துவாதசி முன்னிரவு 11.03 மணிவரை.

அவிட்டம் நள்ளிரவு 12.00 மணிவரை
சுபநேரம் 4.45-6.15 மணிவரை
இராகுகாலம் -12.15-1.45 மணிவரை

சந்திராஷ்டமம்.
புநர்பூசம், பூசம்

வளவன்

**மேஷம்:** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்:** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பகை விலகி பாசம் கூடும் நாள், ரோக பயமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாது பார்த்துக் கொள்வது நல்லது.

**சிம்மம்:** மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள்.

**துலாம்:** வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** பணத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பணவரவு திருப்தி தரும், பொதுவாழ்வில் புகழ் கூடும், அதிஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் கூடும்.

**கும்பம்:** சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்:** உறவினர்களின் அன்புத்தொல்லைக்கு ஆளாகலாம், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

கடவுள் தம்மை நோக்கி வருபவனை நோக்கி தானே செல்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல் குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும்

## பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் உமாகுமரன்



(லண்டன்)

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட தனிநபர்களிற்கு எதிராக பிரிட்டன் விதித்துள்ள தடைகளை வரவேற்றுள்ள பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர் உமாகுமரன் மனித உரிமை மீறல் குற்றவாளிகளைச் சர்வதேச நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தவேண்டும் என நான் தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுப்பேன் என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மோதலின் வடுக்களும், பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டமையும் என்றும் எம் நினைவிலிருந்து அழியாது. தமிழ் சமூகத்திற்குள் இது குறித்த வலி எவ்வளவு ஆழமானதாகக் காணப்படுகின்றது என்பதும் எனக்குத் தெரியும். அவர்களில் பலர் 15 வருடங்களாக நீதிக்கான பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர்.

மனித உரிமை மீறல்களிற்கு எதிரான தடை முக்கியமான முதலாவது நடவடிக்கையாகும். மிக நீண்டகாலமாகக் குற்றவாளிகள் தண்டனையின் பிடியிலிருந்து தப்பியுள்ளனர் .

மனித உரிமை மீறல்களிற்குக் காரணமானவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவதை அனுமதிக்கப் போவதில்லை என பல காலமாக தொழிற்கட்சி உறுதியளித்து வந்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் பரிந்துரைத்தது போன்று மனித உரிமை மீறல் குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் என நான் தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுப்பேன்.

உயிர்பிழைத்தவர்கள், விடைகளை இன்னமும் தேடும் குடும்பத்தவர்கள், இந்த குற்றங்களின் நிழலில் வளரும் அடுத்த தலைமுறையினருக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம், நீதிப் பொறுப்புக்கூறலிற்கு வேண்டுகோள் விடுப்பதற்கு எனது குரலை பயன்படுத்துவதை ஒருபோதும் நிறுத்தமாட்டேன் எனத் தெரிவித்தார். (நி-8)

# கிராம்பு விலை அதிகரிப்பு



(கொழும்பு)

சந்தையில் கிராம்புகளின் விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அதன்படி ஒரு கிலோ கிராம் உலர்ந்த கிராம்பின் விலை தற்போது 2,500 ருபாவாக அதிகரித்துள்ளது.

ஒரு கிலோக் கிராம் கிராம்பு பச்சையாக இருந்தால் அதன் விலை 800 ரூபாயாக அதிகரித்துள்ளதாகவும் ஏற்றுமதி விவசாயத் துறை மேலும் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதியாகும் கிராம்பு, கண்டி, மாத்தளை, கேகாலை, நுவரெலியா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் முக்கியமாகப் பயிரிடப்படுகிறது. (நி-8)

# மஹாபொலவை தாமதமின்றி வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல புலமைப்பரிசிலைத் தாமதமின்றி வழங்குவதற்காகக் குறுகிய கால நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த வருடம் தாமதமான மஹாபொல உதவித்தொகையைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அந்த அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் மஹாபொல உதவித்தொகையைப் பெறுவோரின் கணனித் தரவுகளை நவீனமயப்படுத்துதல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் வைத்தியர் மதுர செனவிரத்னவின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றதாக அந்த அமைச்சு குறிப்பிட்டது. (நி-8)

# 22, 450 நிறுவனங்கள் E.P.F செலுத்தவில்லை

## எதிர்காலத்தில் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்தார் பிரதி தொழிலமைச்சர்

(கொழும்பு)

22 ஆயிரத்து 450 இற்கும் அதிகமான நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பணத்தை வைப்புச் செய்யவில்லை என பிரதிதொழிலமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 22 ஆயிரத்து 450 இற்கும் மேற்பட்ட அரச, அரச அனுசரணையில் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான நிதியைச் செலுத்தவில்லை.

தற்போது 36 பில்லியன் ரூபாய் ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தவேண்டியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

டிஜிற்றல் அமைச்சுடன் ஒருங்கிணைந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த வேலைத்திட்டங்கள் ஊடாகப் பெரும்பாலான விடயங்களை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இதனடிப்படையில் தற்போது நிலவும் பல்வேறு பிரச்சினைகள், குறைபாடுகள் நிவர்த்திக்கப்படுமென பிரதி தொழிலமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-8)

# வீதிப்புனரமைப்போடு நிற்காமல் வெள்ள வாய்க்கால்களையும் சரி செய்யுங்கள்

## இளங்குமரன் எம்.பி கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் வீதிகளை செப்பனிடக் கொடுக்கும் முக்கியத்துவத்தை வெள்ளநீர் வடிகால்களுக்குத் தருவதில்லை என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

இதில் பங்கு கொண்டு வீதி அபிவிருத்தி தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.நகரப்பகுதியில் வீதி புனரமைப்புக்கு அதிகாரிகள் கொடுக்கும் முக்கியத்துவத்தில் சற்றையேனும் வெள்ள வடிகாலுக்குக் கொடுக்காதது ஏன்? சிறுமழை பெய்தால் கூட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வீதி, யாழ்.இந்துக்கல்லூரி வீதி என யாழ்.நகரின் பல்வேறு பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

இதை சரி செய்ய வேண்டியது அதிகாரிகளின் கடமை எனவும் இச்சபை (அபிவிருத்திக் குழு) இதைக் கரிசனையுடன் செயற்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார். (நி-8)

# வாகன விலைகள் நடப்பாண்டில் மாறாது

## பொருளாதார ஆலோசகர் துமிந்த

(கொழும்பு)

வாகன இறக்குமதிக்கான வரித் திருத்தங்கள் இந்த ஆண்டில் மாறாது என ஜனாதிபதியின் மூத்த பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ தெரிவித்துள்ளார்.

அதன்படி, இந்த ஆண்டு சந்தையில் வாகன விலைகளில் எந்த மாற்றமும் இருக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் மூத்த பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ நேற்று முன்தினம் இரவு தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10,886 டெங்கு நோயாளர்கள் இதுவரை அடையாளம்

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக எதிர்வரும் நாட்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் எனச் சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் நாட்டில் 10 ஆயிரத்து 886 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடும் காய்ச்சலுடனான தலைவலி, குமட்டல், வாந்தி, தோலில் சிவப்புப் புள்ளிகள், இரத்தப்போக்கு, தசை மற்றும் மூட்டு வலி போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் உடனடியாக வைத்திய சாலைக்கோ அல்லது தகுதி வாய்ந்த வைத்தியரிடமோ சென்று உரிய சிகிச்சையை பெற்றுக் கொள்ளுமாறு தேசிய டெங்கு நோய் தடுப்புப் பிரிவு பொதுமக்களைக் கோரியுள்ளது. (நி-8)

# தேசபந்துவை பதவியிலிருந்து நீக்க யோசனை சமர்ப்பிப்பு



(கொழும்பு)

தேசபந்து தென்னகோனை பொலிஸ் மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவதற்கான யோசனை ஒன்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் இந்த பிரேரணை கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த பிரேரணையில் தேசிய மக்கள் சக்தியை அங்கத்துவப்படுத்தும் 115 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளதாகப் பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்துள்ளார். (நி-8)

# புளியம்பொக்கணை பொங்கல் விழாவிற்கான போக்குவரத்து ஆராய்வு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான கரைச்சி புளியம் பொக்கணை ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 11.04.2025 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் குறித்த ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்திர பொங்கல் திருவிழாவினை முன்னிட்டு ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்களிற்கான போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் காலை 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனின் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது இரண்டு தனியார் போக்குவரத்து சபையினரின் பேருந்துகளுக்கு ஒரு இலங்கை போக்குவரத்து சபை பேருந்தினை சேவையில் ஈடுபடுத்துவது என்ற தீர்மானம் எட்டப்பட்டது.

கிளிநொச்சி பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் பேருந்துகள் மட்டும் பரந்தன் சந்தியில் ஐந்து நிமிடங்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றி இறக்க முடியும். ஏனையவர்கள் தரித்து நிற்க முடியாது எனவும் பரந்தன் மற்றும் ஆலய வளாகத்தில் குறித்த பேருந்து சேவைகளை கண்காணிப்பதற்காக இரண்டு விசேட பொலிஸ் காவலரன்களை நிறுவுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த தீர்மானங்களை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சகலருக்கும் தெரியப்படுத்த வேண்டுமெனவும். இத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்தாத மற்றும் பாதை வழித்தடம் சரியாகப் பின்பற்றப்படாதவர்களின் பாதை வழித்தட உரிமத்தினை வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு சென்று இடைநிறுத்துவது என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் உதவி மாவட்ட செயலாளர் ஹ.சத்தியஜீவிதா, கண்டாவளை பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன், இந்து கலாசார உத்தியோகத்தர், வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினர், இலங்கை போக்குவரத்து, தனியார் போக்குவரத்து சபையினர், ஆலய பரிபாலன சபையினர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (6-8-316)

# தேர்தல் தொடர்பில் முறைப்பாடுகள் சட்டத்தை மீறிய 32 பேர் கைது

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இரு வெவ்வேறு பொலிஸ் நிலையங்களுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரண்டு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவரின் பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் சமூக ஊடகங்களில் காணொளிகளை பதிவிட்டுள்ளதாக பொலநறுவை - சிறி புர பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

மேலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவருக்கு சார்பாக பெரிய கட்வுட் ஒன்று வைக்கப்பட்டுள்ளதாக மாத்தளை - மஹவெல பொலிஸ் நிலையத்திற்கு நேற்றைய தினம் முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

இந்நிலையில் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர் பில் இதுவரை 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கைதானவர்களில் 10 வேட்பாளர்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 16 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சேர் பொன் இராமநாதன் நினைவுப்பேருரை-2025**

பேருரைத் தலைப்பு :

(இலங்கை, வடமாகாணத்தில் குடித்தொகை வேறுபாட்டு ஒழுங்கும், இடஞ்சார் பரம்பல் மாற்றங்களும்- 1871-2022)

**"The population variations pattern and spatial distributional changes in the Northern Province of Sri Lanka - 1871-2022"**

பேருரை வழங்குனர் :

**பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை,**
**தகைசால் பேராசிரியர்,**
**முன்னாள் துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

**திகதி :** 26.03.2025 (புதன்கிழமை)
பி.ப 3.00 மணி

**நிகழ்விடம் :** கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

(C-2534)

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப்பேருரை-2025**

பேருரைத் தலைப்பு :

**"Pioneer in Women's Health: Dr.Siva Chinnatamby"**
**"பெண்கள் ஆரோக்கியத்தில் முன்னோடி: கலாநிதி.சிவா சின்னத்தம்பி"**

பேருரை வழங்குனர் :

**Dr.Darshi Thoradeniya,**
**Head/Department of History,**
**Faculty of Arts,**
**University of Colombo.**
**(கலாநிதி.தர்ஷி தொறதெனிய,**
**தலைவர் / வரலாற்றுத்துறை,**
**கலைப்பீடம்,**
**கொழும்புப் பல்கலைக்கழகம்.)**

**திகதி :** 26.03.2025 (புதன்கிழமை)
பி.ப 4.00 மணி

**நிகழ்விடம் :** கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

(C-2533)

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடானில் பள்ளிவாசல் மீது தாக்குதல் 5 பேர் உயிரிழப்பு



(கார்டும்)

சூடானில் பள்ளிவாசல் ஒன்றின் மீது, துணை இராணுவப்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

சூடானின் தலைநகரான கார்டுமில் உள்ள இஸ்லாமிய மத வழிபாட்டு தலத்தைக் குறிவைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர். தலைநகர் கார்டுமினை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வர இராணுவம் தீவிர நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் துணை இராணுவப்படையினர் இத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

சூடானில் கடந்த 2021 ஆம் ஆண்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இதனைத் தொடர்ந்து நாட்டின் தலைவராக இராணுவத் தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் செயற்பட்டு வருகிறார். அவருக்கு அடுத்த நிலையில் துணைத் தலைவராக துணை இராணுவப் படையின் தளபதியான ஜெனரல் முகமது ஹம்டன் டகலோ செயற்பட்டு வருகின்றார்.

இதனிடையே துணை இராணுவத்தின் படைப் பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவுப் படையினரை இராணுவத்துடன் இணைக்க இராணுவத் தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் முயற்சி மேற்கொண்டார். இதற்கு துணை இராணுவப் படையின் அதிவிரைவு ஆதரவுப் படையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது. இதனால், இராணுவத்திற்கும், துணை இராணுவத்திற்கும் இடையே கடந்த 2023ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி முதல் கடும் மோதல் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (நி-8)

# போருக்கு முற் ஆரம்பமானது

(டுபாய்)

**ரஷ்யா - உக்ரைன் இடையே நடக் முடிவுக்குக் கொண்டு வரும் வகையி மற்றும் ரஷ்ய அதிகாரிகளுக்கு இ பேச்சுவார்த்தைகள் சவுதி அரேபியா மாகி நடைபெற்று வருகின்றன.**

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. மூன்று ஆண்டுகளாக இந்தப் போர் நடந்து வருகிறது. இரு தரப்பிலும் ஏராளமான உயிரிழப்புகள், பலத்த சேதம் ஏற்பட்டுள்ளன. அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் பேச்சு நடத்தி, போரை முடிவுக்கு கொண்டு வரத் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்.

அமெரிக்க மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்த அதிகாரிகள் இந்த விவகாரம் குறித்து மேற்காசிய நாடான சவுதி அரேபியாவில் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது 30 நாள் இடைக்கால போர் நிறுத்தத்திற்கு

உக்
குறித்
பேச்ச
விருப்
இ
தினம்
அமை
அமெ
அதிக
பேச்ச
பியா
வருக

# நடிகர் ஷிஹான் ஹுசைனி நேற்று காலமானார்



(டில்லி)

தென்னிந்திய நடிகரும், கராத்தே மற்றும் வில் வித்தை நிபுணருமான ஷிஹான் ஹுசைனி நேற்று அதிகாலையில் காலமானார்.

அவரது மறைவுச் செய்தியை அவரது குடும்பத்தினர் பேஸ்புக்கில் உறுதிப் படுத்தினர்.

அவரது உடல் சென்னை பெசன்ட் நகரில் உள்ள அவரது இல்லத்தில் குடும்பத்தினர், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்படும்.

பின்னர், அவரது உடல் மதுரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இறுதிச் சடங்குகள் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹுசைனி தனது சமூக ஊடகப் பக்கங்களில் தொடர்ந்து புதுப்பிப்புகளை வழங்கி தனது புற்றுநோய் பயணத்தை ஆவணப்படுத்தி வந்தார்.

அவர் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு, ஹுசைனி தனது உடலை மருத்துவ ஆராய்ச்சிக்காக தானம் செய்யும் முடிவை அறிவித்தார்.

1986 ஆம் ஆண்டு கமல்ஹாசனின் புன்னகை மன்னன் படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானார்.

பின்னர் ரஜினிகாந்தின் வேலைக்காரன், பிளட்ஸ்டோன் உள்ளிட்ட தமிழ் படங்களில் நடித்தார்.

விஜயின் பத்ரி படத்தில் கராத்தே பயிற்சியாளராக நடித்தார்.

விஜய் சேதுபதியின் காத்துவாக்குல ரெண்டு காதல் மற்றும் சென்னை சிட்டி கேங்ஸ்டர்ஸ் ஆகியவை அவரது இறுதி நடிப்பு முயற்சிகளில் சில.

படங்களில் நடிப்பதைத் தவிர, பல ரியாலிட்டி ஷோக்களில் நடுவராகவும் தொகுப்பாளராகவும் அவர் தோன்றினார். ஹுசைனி போர் விளையாட்டு, சிற்பம், தற்காப்புக்கலைகள் மற்றும் வில் வித்தை ஆகியவற்றில் தனது நிபுணத்துவத்தை வெளிப்படுத்திய பன்முகத் திறமை கொண்டவராக இருந்தார். (நி)

# இராணுவத்திற்கு எதிராக ம பங்களாதேஷில் மீ



(இஸ்லாமாபாத்)

பங்களாதேஷில் இராணுவம், அரசியலில் தலையிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் தலைமையிலான புதிய அரசியல் கட்சி போராட்டத்தில் இறங்கியுள்ளது. இதனால் அங்கு மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் வெடித்ததால், அவர் இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். இதைத் தொடர்ந்து, முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது.

ஹ
டத்தை
ஒன்றி
கட்சி
கடந்த
நிலை
யனி
குறுக்
குற்ற
இ


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...முற்றுப்புள்ளி வைக்க

## ...னது பேச்சுவார்த்தை

**...யே நடக்கும் போரை ...கையில், அமெரிக்க ...க்கு இடையேயான ...ரேபியாவில் ஆரம்ப ...றன.**




உக்ரைன் ஒப்புதல் அளித்தது. இது குறித்து ரஷ்யா அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்த விரும்புவதாக தெரிவித்து இருந்தது.

இந்நிலையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை உக்ரைனில் அமைதி ஒப்பந்தம் குறித்து அமெரிக்கா மற்றும் ரஷ்ய அதிகாரிகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தைகள் சவுதி அரேபியாவில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. எரிசக்தி உட்கட்டமைப்பு மீதான தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டு வருதல் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

உக்ரைனில் ரஷ்ய ட்ரோன் தாக்குதல்கள் தொடரும் நிலையில், சவுதியில் அமெரிக்க-ரஷ்ய அதிகாரிகள் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.


உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல்கள் இரவு முழுவதும் தொடர்ந்தன. ரஷ்யா 99 ஆளில்லா விமானங்களை ஏவியதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. இரவு உக்ரைன் முழுவதும் ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் குறைந்தது ஏழு பேர் கொல்லப்பட்டதாக உள்ளூர் உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-8)

## எகிப்திய பிரமிட்டுகளுக்கு அடியில் நிலத்தடி நகரம் கண்டுபிடிப்பு



(ஹிரியோ)

எகிப்திய பிரமிட்டுகளுக்கு அடியில் 2,100 அடிகள் மேல் பரந்து விரிந்துள்ள எட்டு தனித்துவமான செங்குத்து உருளை வடிவில் கலைப்பொருட்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.



இது தவிர, கிசாவில் உள்ள புகழ்பெற்ற எகிப்தியப் பிரமிட்டுக்களுக்கு அடியில் மிகப்பெரிய நிலத்தடி நகரம் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். ரேடார் கருவிகளின் உதவியுடன் ஆயிரக் கணக்கான அடி ஆழத்தில் தெளிவுத் திறனுடனான புகைப்படிவங்கள் பெறப்பட்டுள்ளன.

ஸ்கொட்லாந்து பல்கலைக்கழகத்தின் நிபுணர் மற்றும் இத்தாலியில் உள்ள பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானி ஆகியோரே இந்தப் பயணத்திற்குத் தலைமை தாங்கியுள்ளனர். (நி-8)

## ...ாக மாணவர்கள் போராட்டம் ...ல் மீண்டும் பதற்றம்



ஹசீனாவுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுத்த மாணவர்கள் ஒன்றிணைந்து, தேசிய குடிமக்கள் கட்சி என்ற புதிய அரசியல் கட்சியை கடந்த மாதம் ஆரம்பித்தனர். இந்நிலையில் பங்களாதேஷின் அரசியலில் அந்நாட்டு இராணுவம் குறுக்கிடுவதாக அக்கட்சியினர் குற்றம்சாட்டி வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன் தினம் டாக்கா பல்கலை வளாகத்திற்குள் தேசிய குடிமக்கள் கட்சியினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதன் போது இராணுவத்தினர் தங்கள் பணியை மாத்திரம் மேற்கொள்ள வேண்டும் எனவும், நாட்டுக்குள் நுழைந்து அரசியலில் தலையிடக் கூடாது எனவும் அதற்கு தாம் அனுமதிக்க மாட்டோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

மாணவர் போராட்டத்தால் டாக்காவில் மீண்டும் பதற்றமான சூழல் நிலவி வருகின்றது. இதன் காரணமாக இராணுவம், டாக்கா வீதிகளில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## இங்கிலாந்து கடற்கரையில் மர்ம உயிரினம்





(லண்டன்)

இங்கிலாந்தின் கென்ட் பகுதியில் உள்ள கடற்கரையில் பார்ப்பதற்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் இனங்காணப்பட்ட உயிரற்ற உயிரினமொன்று அப்பகுதி மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மீனின் உடலையும் வேற்றுக்கிரக வாசியின் தோற்றத்தையும் கொண்டு காணப்படும் குறித்த உயிரினமானது உயிரற்ற நிலையில் கடற்பாசியால் சூழப்பட்டு மணலில் புதையுண்ட நிலையில் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அக்கடற்கரைக்குச் சென்ற இருவர் குறித்த உயிரினத்தைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளதோடு அதனை புகைப்படம் எடுத்து தமது சமூக வலைத் தளங்களிலும் பதிவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த புகைப்படமானது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோயா அவரைச் செய்கையை முன்னெடுக்க முனைப்பு!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**


இன்று இச்செய்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்திலிருந்து வருகின்றது. சாவகச்சேரியின் மைந்தனும் அமெரிக்காவின் சிறந்த விஞ்ஞானிகளில் ஒருவரான பேராசிரியர் சிவா சிவானந்தன் அவர்களின் தலைமையில் பேராதனைப் பல்கலைக்கழக முன்னைநாள் துணைவேந்தரும் மகப்பேற்றியல் சத்திரசிகிச்சை நிபுணருமான பேராசிரியர் லமாவன்ச, இவர்களுடன் விவசாயப்பீட பீடாதிபதி பேராசிரியர் ஜெயவர்த்தன, முன்னைநாள் பீடாதிபதி பேராசிரியர் சரத் கொடித்துவக்கு மற்றும் பேராசிரியர் பௌரகம ஆகியோருடன் விவசாய பீடத்தின் விரிவுரையாளர்களும் கலந்துகொண்டனர். முன்னதாக பல்கலைக்கழக துணைவேந்தருடனான கலந்துரையாடலில் இக்குழு ஈடுபட்ட பின்னர் விவசாய பீடத்தில் தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெற்றது.

வடபகுதியில் சோயா அவரை உற்பத்தியை விவசாய திணைக்களத்துடனிணைந்து மீண்டும் ஆரம்பிப்பது பற்றியும் வறுமைக் கோட்டிலிருக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சமூக தோட்டங்களை உருவாக்குவது பற்றியுமான கலந்துரையாடலாக இது அமைந்தது. பலநாடுகளில் சோயா உற்பத்தி முன்னிலைப்படுத்தப்பட்டு அதிலிருந்து பலவகை மதிப்பேற்றஞ் செய்த பொருட்கள் உருவாக்கப்படுவதும் அது சோயா வர்த்தகத்தில் முதன்மை பெற்றதும் அதுபோல வடபகுதியிலும் இப்பயிர்ச்செய்கையை முன்னெடுப்பதற்கும் வழி வகைகள் ஆய்வுசெய்யப்படுகின்றன.

சோயா அவரை ஒரு காலத்தில் வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டு பின்னர் அதன் வேர்களில் அதிகளவில் தழைச்சத்தை பதிக்கும் வேர்முடிச்சுக்கள் உருவாவது குறைவடைந்ததால் இன்னும் பலவீனமானதால் இச்செய்கை பாதிக்கப்பட்டு விவசாய பெருமக்கள் மாற்றுப் பயிர்களை பயிரிட வேண்டியதாயிற்று. வேர்முடிச்சுக்களை சோயா அவரைப் பயிர்களில் உருவாக்குவதற்கு தேவையான குறிப்பிட்ட றைசோபியம் எனும் பக்ரீறியாவின் விருத்தி மண்ணில் போதுமானதாக இல்லாததும் ஒரு காரணமாக கூறப்பட்டது. தற்போது மீண்டும் சோயா அவரையை பயிர் செய்வதற்கான வாய்ப்புக்கள் பற்றியும் அதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கான ஆராய்ச்சிகளைச் செய்து இப்பயிர்ச்செய்கையை விரிவாக்க விரிவாக கலந்துரையாடப்பட்டது.

சோயா அவரை அதிகளவில் புரதச்சத்துடைய தானியப்பயிர். வளியிலுள்ள தழைச்சத்தை வேரில் இணையும் றைசோபியம் பக்ரீறியாவுடன் சேர்ந்து வேர்முடிச்சுக்களாக உருவாக்குவதனால் இப்பயிருக்கு தழைச்சத்து இடுவது மீதமாகும். அத்துடன் இது ஒரு அவரைப்பயிராக இருப்பதனால் மண்ணை வளமாக்கும் தன்மையுடையதுடன் நன்றாக வளரும் பட்சத்தில் அதிகமான விளைச்சலையும் தரக்கூடியது. சோயா அவரைப் பயிரை வளர்க்கக்கூடிய மண்வகைகள் ஆராயப்பட்டு அதற்குத் தேவையான நீர் என்பனவும் கணிப்பிடப்படல் வேண்டும். உலர் வலயப் பிரதேசமான வடபகுதியில் சோயாஅவரைப் பயிர் சிறப்பாக வளரக்கூடியதாக காணப்பட்டால் அது நிச்சயம் எமது விவசாயிகளுக்கான வரப்பிரசாதமாகவும் மக்களுக்கு அதிக வருமானத்தையும் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



புகையிலைச் செய்கையாளர்களுக்கு மாற்றுப் பயிரை பரிந்துரைக்கும் நிலையில் வடபகுதி விவசாயம் தள்ளாடிய நேரத்தில் அவரைப் பயிராக மீண்டும் பலவகை பயிர்ச்செய்கை உத்திகளுடன் களமிறங்கும் இக்குழு நிச்சயமாக சோயா அவரைப் பயிர்ச் செய்கைக்கான அனுகூலங்களை ஆய்வுமூலம் [illegible] செய்து விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

சோயா அவரை பயிர்செய்யப்பட்டால் அதிலிருந்து மக்களின் உணவுக்கான அதிகரித்த புரதமும், அதனை விட சிறந்த மதிப்பேற்றஞ்செய்த பொருட்களை விலைமலிவாகக் கிடைக்க செய்யவும் அதனை கால்நடைத் தீவனமாக குறிப்பாக கோழித் தீவன உற்பத்தியிலும் இன்னும் ஏனைய கால்நடைகளின் உணவுத் தேவையிலும் கணிசமான பங்களிக்கும். இதனுடன் சமபோஷ உற்பத்தியில் சோயா அவரையின் பங்கு மிகமிக அதிகமானதாகும். இதன் மூலம் சமபோஷ உற்பத்தியை அதிகரிக்கவும் அதன் மூலம் ஊட்டச்சத்து நலிவுற்ற மக்களுக்கு அடிப்படை ஆதார உணவாக இது பயன்படும் என்பதனையும் நாம் கவனிக்கத் தவறலாகாது.

சோயா பயிர்ச்செய்கையில் பீடைத்தாக்கங்கள் அவதானிக்கப்பட்டிருக்கின்றன. சோயா அவரைக் காய்களில் குத்தியுறுஞ்சும் வாயுறுப்புடைய பச்சை நிற சாறுஉறுஞ்சிகள் (Stink bugs), மண்ணிற சாறு உறுஞ்சிகள் (Pod bugs) அவதானிக்கப்பட்டுள்ள போதிலும் காய் துளைப்பானும் இன்னும் காயில் துளைபோடும் ஈயும் சேதத்தை ஏற்படுத்துகின்றன. அதிகரித்த வெய்யில் பயிர்வளர்ச்சிக்குத் தடையாக காணப்பட்டாலும் வெப்ப நிலையை முகாமைத்துவப்படுத்தும் பயிர்ச்செய்கை முறைகளை கடைப்பிடித்தால் இந்தத் தடையையும் தாண்டிவிடலாம். இவற்றை விட வடபகுதியில் முயலினாலான சேதம் மிகவும் அதிகம் என்பதனால் முயலை பொறிவைத்து பிடித்தும் அழிக்கலாம். சோயா பயிர்ச்செய்கை அதிகரித்தால் அறுவடை செய்யப்படும் தானியங்களை அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பல்வகைப் பொருட்களை உருவாக்கிக் கொள்ளலாம். பல வகை மதிப்பேற்றஞ் செய்த பொருட்களின் உருவாக்கத்திற்கும் இதற்கான தொழிற்சாலைகள் உருவாகும் போது பலருக்கு அது வேலைவாய்ப்பினை வழங்கும்.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணப் பேராதனை பல்கலைக்கழகங்களிணைந்து அமெரிக்காவின் இலினொயிஸ் பல்கலைக்கழகத்துடனான முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான வழிவகைகள் ஆராயப்பட்டன.

சமூகத் தோட்டங்களை உருவாக்குவதற்கான எண்ணக்கரு வறுமைக்கோட்டுக்கு கீழாக வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்டது. தற்போதய பொருளாதார சரிவின் காரணமாக இவ்வாறான நிலையிலுள்ள மக்கள் வருமானமின்றி தமது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சிரமப்படுகின்றார்கள். இவர்களுக்கான வருமானத்தை வழங்கக்கூடிய சமூகத் தோட்டங்களை அவர்களது நிலத்தில் உருவாக்குவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வழிமுறைகளை வழங்குவதும் இக்கலந்துரையாடலின் இன்னொரு நோக்கமாகும். சூரிய சக்தியிலியங்கும் சாதனங்களை பயன்படுத்தும் தொழில்நுட்ப வழிமுறைக்கு இம்மக்களது வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் வழிகளை பொருளாதாரத்தால் நலிவுற்றிருக்கும் இந்நேரத்தில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணித்து அவர்களின் வாழ்வியலை மேன்மையுற வைக்க வேண்டும். இதில் யாழ்ப்பாண மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களின் விவசாய பீட சமூகம் முழு முயற்சியெடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனஅழிப்பின் ஆக்கிரமிப்பே! தையிட்டி விகாரையும் புதிய மடாலயமும்

## மா.சத்திவேல்

(நெளுக்குளம்)

இன அழிப்பைத் தொடர்வார்கள் என்பதற்கான அடையாளமாகவே சட்டவிரோத தையிட்டி விகாரையும் புதிய மடாலயமும் அமைந்துள்ளதாக, சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இராணுவத்தினரால் தையிட்டியில் பலவந்தமாக கட்டப்பட்டுள்ள விகாரை சட்டத்திற்கு விரோதமானது அதனால் தமது சொந்த நிலங்களை இழந்துள்ள மக்களும் ஒட்டுமொத்த தமிழர்களும் ஓங்கி குரல் எழுப்பிக் கொண்டிருக்கையில் விகாரைக்கு அண்மையில் மீண்டும் சட்ட விரோதமாகப் பிக்குகள் தங்கும் மடாலயம் ஒன்று கட்டப்பட்டு கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளமை தமிழர்கள் மத்தியில் பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.


எனவே சட்டவிரோத தையிட்டி மற்றும் மடாலயம் தொடர்பில் போராட்டத்தை முன்னெடுக்க அரசியல் கட்சிகளும் சமூக அமைப்புகளும் கூட்டு சேர்வதோடு சமய அமைப்புகளும் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் கருதி தமது முழுமையான ஆதரவை வெளிப்படையாகத் தெரிவிக்க முன்வருமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம். (6-8-299)

# பாணன்குளம் நாச்சி அம்மன் வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் (2025) எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பர உற்சவமும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு தேர் உற்சவமும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை 4.30 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெற்று மஹோற்சவ நிறைவைத் தொடர்ந்து 14 ஆம் திகதி திங்கட்கிழமை வருடப்பிறப்பு உற்சவமும், 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு பூங்காவன உற்சவமும், 16 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு வைரவர் உற்சவமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (6-8)



காசநோய் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று நேற்று முன்தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது. வைத்தியர்கள், சுகாதாரத் துறைப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இந்த விழிப்புணர்வு செயலமர்வில் கலந்து கொண்டனர். (படம்: மகாலிங்கம்)

# இலங்கை-இந்திய மீனவர்களுக்கு இடையிலான விசேட சந்திப்பு இன்று வவுனியாவில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை-இந்திய மீனவர்களுக்கிடையிலான பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு காணும் நோக்குடன் வவுனியாவில் உள்ள தனியார் விடுதிஒன்றில் இரு நாட்டு மீனவர்களுக்கு இடையில் சந்திப்பு ஒன்று இன்று புதன் கிழமை இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்பில் கலந்து கொள்வதற்காக இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஜேசுராஜா, ஆல்வின், சகாயம், ஜஸ்டின், ஜெர்மனியஸ் ஆகிய ஐவர் கொண்ட குழு நேற்று சென்னை விமான நிலையத்தில் இருந்து விமானம் மூலம் யாழ். சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

நாகபட்டினத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள நிலையில், அவருடன் இணைந்து ஆறு பேர் கொண்ட குழுவாக இச்சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதேவேளை இலங்கை மீனவர்கள் சார்பில் யாழைச் சேர்ந்த சுப்பிரமணியம், இராமச்சந்திரன், அன்னராசா மற்றும் வர்ணகுலசிங்கம், முல்லைத்தீவைச் சேர்ந்த மரியராசா, மன்னாரை சேர்ந்த ஆலம் மற்றும் சங்கர் , கிளிநொச்சியைச் சேர்ந்த, பிரான்சிஸ் மற்றும் அந்தோணி பிள்ளை, ஆகியோர் உள்ளிட்ட 12 பேர் கொண்ட குழு இந்தப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்கின்றனர்.

தமிழக மீனவர்கள் முதல் கட்டமாக ஒரு மாத காலம் இலங்கை கடற்பரப்புக்குள் இழுவை மடி மீன்பிடியை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-8-33)

# சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 180 | 200 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 400 | 500 | 400-450 | 500 |
| தக்காளி | 200 | 160 | 200 | 120-150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 250 | 200-250 | 200 |
| கோவா | 300 | 250 | 300 | 200 | 400 |
| கரட் | 600 | 650 | 700 | 700 | 800 |
| பூசணி | 140 | 120 | 140 | 100 | 200 |
| புடோல் | 180 | 200 | 150 | 210 | 250 |
| வாழைக்காய் | 150 | 100 | 150 | 60-80 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 100-300 | 300 | 80-200 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 140 | 150 |
| பாகற்காய் | 450 | 500 | 600 | 500 | 500 |
| வெண்டக்காய் | 300 | 250 | 200 | 250-300 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 260 | 200 | 150 | 250 |
| பயற்றங்காய் | 150 | 250 | 300 | 300-350 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 250 | 350 |
| பீற்றூட் | 150 | 200 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 650 | 450 | 500 | 400-500 | 600 |
| முருங்கைக்காய் | 2500 | 2500 | 1500 | 2000 | 3000 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 450 | 700 |
| கத்தரிதம்புள்ள | 200 | 120 | 100 | 180 | 230 |
| கீரை – 1 பிடி | 140 | 100 | 150 | 80-90 | 150 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 250-300 | 200 | 150-250 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 450 | 400 | 400 | 600 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 80-100 | 400 |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 100 | 50 | 60 |
| ஈரப்பலா | 150 | 120 | 100 | 100 | 250 |

# வீடொன்றின் குளியலறையில் சூட்சுமமான முறையில் கசிப்பு உற்பத்தி

## 380 லீற்றர் கோடா, 20 லீற்றர் கசிப்பு மீட்பு



(தருமபுரம்)

வீடொன்றின் குளியலறைப் பகுதியில் நிலத்தைத் தோண்டி சூட்சுமமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 380 லீற்றர் கோடாவும் 20 லீற்றர் கசிப்பு மற்றும் உற்பத்திப் பொருட்களுடன் சந்தேக நபரொருவர் பொலிஸரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் வீட்டின் குளியலறைப் பகுதியில் சூட்சுமமான முறையில் நிலத்தைத் தோண்டி, யாருக்கும் சந்தேகம் வராத அளவுக்கு கோடா பரல் தாழ்க்கப்பட்டு தண்ணீர் குடத்தில் குழாய்கள் பொருத்தப்பட்டு, காஸ் அடுப்பு மூலம் தீ மூட்டப்பட்டு, இக் கசிப்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட வேளை குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.


கசிப்பு உற்பத்தி முற்றுகையின் போது 380 லீற்றர் கோடாவும் 20 லீற்றர் கசிப்பு மற்றும் உற்பத்திக்கான பொருட்களும் கசிப்பு உற்பத்தியை மேற்கொண்ட 20 வயது இளைஞன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பாகம் - 3
# பொன்னியின் செல்வன்
காவியத் தொடர் 731





ணம் இருக்கிறது. நான் மணந்து கொள்ளும் பெண், நான் காணும் பகற் கனவுகளை நிறைவேற்றுவதற்கு ஒத்தாசையாயிருக்கவேண்டும் அல்லவா?"

"தம்பி! உன் பகற் கனவுகளை ஒரு பெண்ணின் ஒத்தாசை கொண்டு நிறைவேற்றிக் கொள்ளவா ஆசைப்படுகிறாய்?" என்றாள் குந்தவை.

அச்சமயத்தில், "ஐயோ! ஐயோ! அக்கா! அக்கா!" என்ற அபயக்குரல் கேட்டது. குரல் வானதியின் குரல் தான்.

## 46 ஆம் அத்தியாயம் வானதி சிரித்தாள்

நந்தி மண்டபத்தில் அமர்ந்து இளவரசனும், குந்தவை தேவியும் பேசிக்கொண்டிருந்தபோது வானதி தூண் ஓரமாக நின்று கேட்டுக் கொண்டிருந்தபோது, கால்வாயில் படகில் காத்துக் கொண்டிருந்த பூங்குழலிக்கும், சேந்தன் அமுதனுக்கும் முக்கியமான சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது.

"அமுதா! ஒன்று உன்னை நான் கேட்கப் போகிறேன். உண்மையாகப் பதில் சொல்வாயா?" என்றாள் பூங்குழலி.

"உண்மையைத் தவிர என் வாயில் வேறு ஒன்றும் வராது பூங்குழலி! அதனாலேதான் நாலு நாளாக நான் யாரையும் பார்க்காமலும், பேசாமலும் இருக்கிறேன்" என்றான் அமுதன்.

"சில பேருக்கு உண்மை என்பதே வாயில் வருவதில்லை. இளவரசருக்கு ஓலை எடுத்துக் கொண்டு இலங்கைக்குப் போனானே, அந்த வந்தியத்தேவன் அப்படிப்பட்டவன்."

"ஆனாலும் அவன் ரொம்ப நல்லவன். அவன் யாரையும் கெடுப்பதற்காகப் பொய் சொன்னதில்லை."

"உன்னைப் பற்றி அவன் ஒன்று சொன்னான். அது உண்மையா, பொய்யா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்"

"என்னைப் பற்றி அவன் உண்மையில்லாததைச் சொல்வதற்குக் காரணம் எதுவும் இல்லை. இருந்தாலும் அவன் சொன்னது என்னவென்று சொல்!"

"நீ என்னைப் பற்றி மிகவும் புகழ்ந்து பேசியதாகச் சொன்னான்." "அது முற்றும் உண்மை."

"நீ என்னிடம் ஆசை வைத்திருப்பதாகச் சொன்னான், என்னை நீ மணந்து கொள்ள விரும்புவதாகச் சொன்னான்." "அவ்விதம் உண்மையில் அவன் சொன்னானா?"

"ஆம் அமுதா!" "அவனுக்கு என் நன்றியைத் தெரிவிக்க வேண்டும்." "எதற்காக?"

"நானே உன்னிடம் என் மனதைத் திறந்து தெரிவித்திருக்க மாட்டேன் அவ்வளவு தைரியம் எனக்கு வந்திராது.

(தொடரும்...)

என் விருப்பத்தை இந்த விடயத்தில் நீ நிறைவேற்றி வைக்க வேண்டும்" "உன் விருப்பத்தை நிறைவேற்ற நான் சம்மதித்தால் எனக்குப் பிரியமான பெண்ணை மணந்துகொள்ள நீ சம்மதம் கொடுப்பாய் அல்லவா?"

"இது என்ன இப்படிக் கேட்கிறாய்? இருபது ஆண்டுகளாக நம் விருப்பங்கள் மாறுபட்டதில்லை. இதிலே மட்டும் தனியாக எதற்குச் சம்மதம் கேட்கிறாய்?"

"அக்கா அதற்குக் கார



# சிறுவர் அரங்கம்

## அழகு ஆபத்துக்கு உதவாது



ஓர் ஆண் மான் காட்டில் அலைந்து திரிந்து கொண்டிருந்த போது அதற்குத் தாகம் ஏற்பட்டது. தண்ணீரைத் தேடி ஒரு குளத்தின் அருகே வந்தது. தாகம் தீர வயிறு முட்ட நீரைப் பருகியது.

அப்போது தன்னுடைய உருவத்தை தண்ணீரில் கண்டது. தலைக்கு மேல் கிளைகள் போல விரிந்து இருந்த தன் கொம்புகளின் பிம்பத்தை நீரில் பார்த்தது. 'அவை எவ்வளவு அழகாக இருக்கின்றன! உலகிலேயே மிக அழகான மிருகமாக நான் இருப்பதற்கு இந்தக் கொம்புகளே காரணம்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டது.

சொல்லியவாறு கீழே குனிந்த மான் ஒல்லியான தன்னுடைய கால்களைப் பார்த்தது. மிகவும் ஏமாற்றமடைந்தது. 'இல்லை, இந்தக் கால்கள் என்னை அழகில்லாதவனாக்குகின்றன. உலகிலேயே அழகான மிருகமாக நான் இருக்க முடியாது,' என்று சொல்லி வருந்தியது.

மரங்களுக்குப் பின்னால் நின்றவாறு பசியோடு இருந்த புலி ஒன்று சத்தம் இல்லாமல் மானைப் பார்த்துக் கொண்டிருந்தது. மானை நோக்கி மிக மெதுவாக நகர்ந்து வந்தது. உயரமாக வளர்ந்திருந்த புற்கள் சரசரத்தன. தன் எண்ணங்களில் மூழ்கியிருந்த மான் புலி நெருங்குவதைக் கவனிக்கவில்லை.

புலி, மானைப் பிடிக்கப் பாய்ந்தது. திடுக்கிட்ட மான் மிக வேகமாக ஓடத் தொடங்கியது. புலியிடமிருந்து தப்பித்து நான்கு கால் பாய்ச்சலில் அதிவேகமாக ஓடியது. புலி மிகவும் பின்னால் துரத்திக் கொண்டு வந்தது.

இனிமேல் துரத்தினாலும் மானைப் பிடிக்க முடியாது என்று புலி முடிவு செய்த நேரத்தில் மானின் கொம்புகள் ஒரு மரக்கிளையில் சிக்கிக்கொண்டன. மரக்கிளையில் இருந்து விடுபட மான் மிகவும் முயற்சி செய்தது. ஆனால், மானால் கொம்புகளை விடுவிக்க முடியவில்லை.

"என் கால்கள் அழகாக இல்லை என்று நான் அவமானமடைந்தேன். நான் தப்பித்துக் கொள்ள அவை தான் எனக்கு உதவி புரிந்தன.

என் கொம்புகளை நினைத்து நான் பெருமிதம் அடைந்தேன். ஆனால், என்னுடைய இறப்புக்கு அவையே காரணமாக உள்ளன" என்று மான் வருத்தத்துடன் தனக்குள் சொல்லிக் கொண்டது.

இதற்குள் மானை நெருங்கிய புலி அதன் மீது பாய்ந்து, அதை கொன்று தின்றது.

நீதி : கானல் நீர் கண்களுக்கு விருந்து பருக முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் ஒவ்வொருவரிடமும் நல்லவைகளைக் காண்பதே இனிமையான தன்மையாகும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## என் சொல்வோம் எங்கள் தலைவிதியை

தா...தா... தா...
தா... தா... தா...
தா... க்குறைக்கு என் செய்வோம் என்கின்றார் வி.கல்யாணசுந்தரனார்.

இங்கு தா என்பது ஏழு தடவைகள் கூறப்பட்டுள்ளன.

இஃது எழுதாக் குறைக்கு என் செய்வோம் எனப் பொருள்படும்.

ஆம், தலை எழுத்து என்று நாம் கூறுவது கன்மவினை சார்ந்தது. கன்மவினை என்பது மெய்யியலை அடிப்படையாகக் கொண்டது.

ஆக, தலையெழுத்து என்பதை ஏற்பவர்களும் உள்ளனர். மறுப்பவர்களும் இருக்கவே செய்வர்.

ஆனாலும் இப்பிரபஞ்சத்தில் இறப்பு என்பது இருக்கும்வரை கன்மவினை அதாவது தலையெழுத்து என்பதும் இருந்தேயாகும்.

அந்த அடிப்படையில் வி.கல்யாணசுந்தரனார் பாடியதுபோல எழுதாக்குறைக்கு என் செய்வோம்... என்ற நிலைதான் ஈழத் தமிழ் மக்களாகிய எம் நிலைமை என்பது இங்கு உணர்தற்குரியது.

உண்மை. நேற்று 25ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் என்பது மிகவும் முக்கியமானது.

அதாவது யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு தீர்மானங்களை முன்னுரிமை அடிப்படையில் எடுப்பதற்கான கூட்டம் அது.

இக்கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர், அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர், அரச கூட்டுத்தாபன – திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள், துறைசார் பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொள்வர்.

இவ்வாறு நேற்றைய தினம் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றபோது பாராளுமன்ற உறுப்பினர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கூட்டத்தை முடிவுறுத்த வேண்டியதாயிற்று.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு நாள் தீர்மானித்து, அனைத்துத் தரப்புகளும் முன்னாயத்தங்களுடன் கூட்டத்திற்கு வந்திருக்கும் போது, அந்தக் கூட்டம் குழப்பப்படுமாக இருந்தால் – கூட்டத்தை நடத்த முடியாமல் போகுமாக இருந்தால், அதைவிட்ட அபத்தம் வேறு என்னவாக இருக்க முடியும்.

என்ன செய்வது இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையுடன் இரவோடு இரவாக ஆளுநரின் அலுவலகத்துக்குச் சென்று ஊதாரித்தனம் செய்தது.

கூடவே கட்சியை அதன் தலைவர் இரா. சம்பந்தர் நிர்மூலமாக்கினார்.

அதன் விளைவு இப்போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட நடத்த முடியாத அளவில் நிலைமை வந்துற்றது.

என்ன செய்வது எங்கள் இனம் இத்துணை பாவம் செய்துள்ளதா? விடுதலைப் புலிகள் இருந்தால் இப்படி நடக்குமா? என்று வெதும்புகின்ற அளவில் தமிழ் மக்களின் தலைவிதி ஆகிவிட்டது.

# சிவஸ்ரீ மகாதேவக் குருக்களின் மறைவு

## இந்துக் குருமார் அமைப்பு ஆழ்ந்த இரங்கல்

(யாழ்ப்பாணம்)

அந்தண சிரேஷ்டர் சிவஸ்ரீ தானு.மஹாதேவக் குருக்களின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என இந்துக் குருமார் அமைப்பு விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்துக்குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வரக் குருக்கள், செயலாளர் சிவஸ்ரீ ச.சாந்தரூபக் குருக்கள் ஆகியோர் கூட்டாக விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அந்தணர்களின் உயர்வுக்காக அரும்பணியாற்றிய இணுவில் தர்மசாஸ்தா குருகுல முதல்வர் சிவஸ்ரீ மகாதேவக்குருக்களின் மறைவு மிகுந்த கவலையைத் தருகிறது.

பாரதத்தின் மைந்தனாக, பல்மொழி ஆளுமை மிக்கவராக, அன்புடன் அனைவரையும் அரவணைக்கும் பண்பாளராக திகழ்ந்தவர். யார் எந்த உதவி கேட்டாலும் உடனே தயங்காமல் செய்பவர். ஓர் ஆசான் எப்படிவாழ வேண்டும் என முன்னுதாரணமாக வாழ்ந்தவர்.

இந்தியாவில் உள்ள ஆதீனங்கள், குருகுல அதிபர்கள் உள்ளிட்ட பெரியோரது அன்புக்கும் மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரியவராகத் திகழ்ந்தவர்.

அண்மையில் தருமை ஆதீன 27வது நட்சத்திர குருமணிகளால் "சிவாகம கலாநிதி" எனும் சிறப்புக் கௌரவம் வழங்கப்பட்ட பெருந்தகை. இக்கௌரவத்தினை இந்தியத் துணை தூதுவர், குருக்களின் இல்லம் தேடிச் சென்று வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அமரரது ஆத்ம சிவப் பிராப்திக்கு அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்கிறோம். அத்துடன் அவரது உறவுகளுக்கு எமது ஆறுதலை இந்துக் குருமார் அமைப்பு சார்பில் பகிர்ந்து கொள்கிறோம்.

## ஈடுசெய்ய முடியாத இழப்பு

### கலாநிதி ஆறு.திருமுருகன் இரங்கல்

ஈழத்திருநாட்டில் சைவ ஆகம கிரியைகளின் காவலனாக விளங்கிய வேதவிற்பன்னர் சிவஸ்ரீ மகாதேவக் குருக்களின் மறைவு சைவ உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் என கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக எம் மண்ணில் சிவாச்சாரிய பாரம்பரியத்தைக் கட்டி வளர்த்த வேதாகம உபாத்தியாயர் அவர்களின் பிரிவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

இணுவிலில் தனது இல்லத்தில் குருகுலத்தை உருவாக்கி அங்கு பல சிறுவர்களைத் தங்கவைத்து சிவாகம நெறிகளைப் போதித்த பெருந்தகை.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல மகா கும்பாபிஷேகங்களை நிறைவேற்றிய பெருமைக்குரியவர். உயர்ந்த பண்புகளும் சிறந்த அறிவும் மிக்க பெருந்தகையின் ஆத்மா சிவப்பரம் பொருளின் திருவடியில் ஆறுதல் பெற அனைவரும் பிரார்த்திப்போமாக. (ந)

## எங்கள் புலமை அடையாளமான பேராசிரியர் கணநாத் ஒபயசேகரா

### பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அஞ்சலி

உலகப்புகழ் பெற்ற மானிடவியல் பேராசிரியரும் என் குருநாதருமான கணநாத் ஒபயசேகரா அவர்களின் மறைவுச் செய்தி நெஞ்சில் எழுதும் துயரம் தாங்கமுடியாதது என முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த இரங்கல் செய்தியில், எங்கள் சமூகங்களின் மானிடவியலை ஆழ எழுதிய புலமையாளர். எண்ணற்ற நூல்களின் ஆசிரியர். அறிவுத் துணிவோடு மானிடவியலுக்கு அவராற்றிய பங்களிப்பு இணையிலாதது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் விரிவுரையாளராக தொடங்கிய பயணம், அமெரிக்க பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தின் மானிடவியல் பேராசிரியராக, துறைத்தலைவராக உயர்வுகளைக் காணும்.

தனிப்பட்டமுறையில் என் பல்கலைக்கழக மாணவப் பருவத்திலேயே அவரின் ஆய்வு உதவியாளனாகும் பேறு எனக்கானது.

எங்கள் பல்கலைக் கழகத்தின் சமூகவியல், மானிடவியல் கலைத்திட்ட உருவாக்கத்தில், என் கலாநிதிப்பட்ட ஆய்வில் வழிகாட்டியானவர்.

எங்கள் புலமை அடையாளமாக அவர் நிழலில் நிமிர்ந்திருந்தோம். இன்று தனித்தோம். அவர்மேலான நினைவுகளை, புலமை மரபின் தனித்துவங்களைக் காத்து நிற்றலை அவருக்கான அஞ்சலியாக் குவோம். (ம-7)

## சுகாதார சீர்கேடு

## உணவகம் ஒன்றிற்குச் சீல் மூவருக்குத் தண்டம் விதிப்பு

(கோண்டாவில்)

பண்டிகைக் காலத்தினை முன்னிட்டு நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரிபணிமனையின் மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் நிர்மலானந்தன் அவர்களின் ஆலோசனையிலும் வழிகாட்டலிலும் பூட்சிற்றிகள், உணவகங்கள், ஹோட்டல்கள் என்பன தொடர்ச்சியாகப் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் யாழ்ப்பாணம் கோண்டாவிலில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜெகானந்தன் தலைமையிலான குழுவினரால் கடந்த 19.03.2025ம் திகதி ஹோட்டல்கள் பரிசோதிக்கப்பட்டிருந்தன.

இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய மூன்று உணவகங்கள் இனங் காணப் பட்டது. அவை ஏற்கனவே பல தடவைகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டும் அசண்டையீனமாகத் தொடர்ந்தும் சுகாதார சீர்கேட்டுடன் இயங்குகின்றமை அவதானிக்கப்பட்டது.

அத்துடன் திகதி காலாவதியான பொருட்களும் உணவகம் ஒன்றிலிருந்து கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் சுகாதாரப் பரிசோதகர் ஜெகானந்தன் அவர்களினால் நேற்று யாழ்ப்பாண நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை உடன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்று உணவக உரிமையாளர்களிற்கு முறையே 90,000/=, 36,000/=, 30,000/= என மொத்தம் 156,000/= தண்டம் விதித்தது.

அத்துடன் காலாவதியான பொருட்கள் விற்பனை தொடர்பில் ஓர் உணவகத்தை சீல் வைத்து மூடுமாறு யாழ். நீதிமன்ற மேலதிக நீதவான் லெனின குமார் உத்தரவிட்டார்.

இதனையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜெகானந்தனால் குறித்த உணவகம் சீல் வைத்து மூடப்பட்டது. (ம-7,33)

## கொக்குவிலில்

## ஹெரோயினுடன் மூவர் அதிரடிக் கைது

(கொக்குவில்)

யாழ்ப்பாணம் கொக்குவிலில் பகுதியில் 325 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் கும்பல் ஒன்று ஹெரோயின் போதைப்பொருளுடன் நடமாடுவதாகப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் பெண் உட்பட மூவரைக் கைது செய்தனர்.

இதன் போது அவர்களது உடைமையில் 325 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரும் மேலதிக விசாரணைக்காக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் (29.03.2025-03.06.2027)

## எதிலும் சுறுசுறுப்பாக இருக்கும் விருச்சிக இராசி நேயர்களே!



29.03.2025 அன்று சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு மாறுகிறார். மீன ராசிக்கு வரும் சனி பகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவர். மீன ராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு ராசியையும் பார்க்கிறார்.

**விருச்சிகம்:** எல்லோரிடமும் கண்டிப்பும் கட்டாயமும் உள்ள விருச்சிகம் ராசி நேயர்களே! நீங்கள் எதிலும் சுறுசுறுப்பாக இருப்பவர். துணிச்சலுக்கும், தைரியத்திற்கும் பெயர் போனவர். வாக்குத் தவறாதவர். உழைப்பின் மூலமாக மட்டுமே புகழை அடைய விரும்புபவர்கள். குறிக்கோளுடன் வாழ்ந்து வாழ்க்கையை எடுத்துக்காட்டாக வாழ்பவர்கள். இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப் போகிறது.

**கிரகநிலை:** இதுவரை உங்களது சுக ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு செல்கிறார். மூன்றாம் பார்வையால் களத்திர ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் இலாப ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் தன. வாக்கு குடும்ப ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:** உடற் சோர்வு அதிகரிக்கலாம். வருமானம் சீராகவே இருக்கும் என்றாலும் பேராசைக்கு இடம் கொடுக்காமல் பணியாற்றவும். நண்பர்கள் போல் பழகும் விரோதிகளிடம் கவனமாக இருக்கவும். அவர்கள் உங்களுக்கு எதிராக சில சமயம் சதி வேலைகளில் ஈடுபடலாம். ஆனாலும் கலங்க வேண்டாம். துர்க்கை அம்மனை தொடர்ந்து வழிபட்டால், எதிரிகள் உதிரிகளாகித் தொலைந்து போவார்கள். யாராக இருப்பினும் நன்கு யோசித்த பிறகே வாக்குக் கொடுக்கவும். கடன் தொல்லைகள் ஏற்படாது. தர்ம காரியங்களைச் செய்வீர்கள். தடங்கல்களைத் தாண்டி வெற்றியடைவதில் ஐயமேயில்லை. அனுகூலமில்லாத விடயங்களையும் உங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ளும் புத்தி சாதுர்யம் ஏற்படும்.

உங்களின் தனித்தன்மையை இழக்க மாட்டீர்கள். அடுத்தவர்கள் உங்களுக்கு அறிவுரை கூறும்படி நடந்து கொள்ளமாட்டீர்கள். அரசாங்கத் தொடர்புகள் உங்களுக்குச் சாதகமாகவே அமையும். நீண்ட தூரப் பயணங்களால் நன்மை உண்டாகும். கடுமையாக உழைத்துச் செய்யும் காரியங்களில் வெற்றிவாகை நிச்சயம். தார்மீகச் சிந்தனைகளை மேலோங்கச் செய்வார். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். உங்கள் உழைப்பு வீண் போகாது. இது நாள் வரை உடலில் இருந்த சோர்வும் அயர்ச்சியும் மறையும். தேக ஆரோக்கியம் சீராக மாறும்.

குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் குறையும். தாயார் வழியில் இருந்துவந்த மனஸ்தாபங்கள் மறைந்து சுமுகமான உறவு உண்டாகும். குடும்பத்திலும், உற்றார் உறவினர்களிடமும் உங்கள் செல்வாக்கு உயரும். உங்கள் செயல்களைப் புதிய உத்வேகத்துடன் செய்து முடிக்க வழிபிறக்கும். திட்டங்களைச் சரியாகத் தீட்டி அவைகளைப் படிப்படியாக, வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள். புதிய தொழில்களைத் தொடங்குவீர்கள். உங்கள் நண்பர்கள் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார்கள். பெரியோர்களின் ஆதரவு எப்போதுமிருக்கும். ஓய்வு நேரத்தில் கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழவும் சந்தர்ப்பங்கள் அமையும்.

உத்தியோகத்தர்கள் பயணங்களால் அனுகூலமான திருப்பங்களைக் காண்பீர்கள். சிலர் விரும்பிய வெளியூருக்கு மாற்றலாகிச் செல்வார்கள். மேலதிகாரிகள் சற்று பாராமுகமாகவே நடந்து கொண்டாலும் தொல்லைகள் கொடுக்க மாட்டார்கள். ஆனால் சக ஊழியர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். உரிய நேரத்தில் பதவி உயர்வு கிடைக்கும். சோம்பலுக்கு இடம் கொடுக்காமல் உங்கள் வேலைகளைத் திட்டமிட்டு சரியாகச் செய்வது அவசியம்.

வியாபாரிகளுக்கு தொழிலில் இருந்த போட்டிகள் குறையும். இலாபம் அதிகரிக்கும். நண்பர்களையும்,




வாடிக்கையாளர்களையும் அரவணைத்துச் சென்று வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். கொடுக்கல், வாங்கலில் இருந்த தொய்வுகள் நீங்கி, மனதில் உற்சாகம் தோன்றும். அதேநேரம் வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் உங்கள் கை வந்து சேருவதில் தாமதம் ஏற்படும் என்பதால் புதிதாக யாருக்கும் கடன் கொடுக்க வேண்டாம்.

அரசியல்வாதிகளின் பணியாற்றும் திறன் அதிகரிக்கும். கட்சி மேலிடத்தால் உற்சாகப்படுத்தப்படுவீர்கள். கட்சியில் புதிய பொறுப்புகளைப் பெறுவீர்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். அடிக்கடி பயணங்களைச் செய்து, கட்சிப் பணிகளைத் தீவிரமாக ஆற்றி ஆதாயம் பார்ப்பீர்கள்.

கலைத்துறையினர் எதிர்பார்த்த வாய்ப்புகளைப் பெறுவீர்கள். உங்கள் பெயரும், புகழும் உயரும். ரசிகர்களோடு கருத்து வேறுபாடுகள் ஏற்பட நிறையவே வாய்ப்புண்டு. ஆனால் அவற்றை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ரசிகர் மன்றங்களுக்குப் பணம் செலவு செய்வீர்கள். சக கலைஞர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள்.

பெண்கள் கணவரின் பாராட்டுகளை எளிதில் அடைவீர்கள். புதிதாக ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். இல்லத்தில் நிம்மதியைக் காண்பீர்கள். சுப காரியங்களில் கலந்து கொள்வீர்கள். உடல் நலத்தில் மட்டும் சற்று கவனமாகவே இருக்கவும்.

மாணவர்கள் நல்ல மதிப்பெண்களை வாங்க வழிவகையுண்டு. பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். அவர்களால் உங்கள் எதிர்காலத் திட்டங்கள் எளிதில் நிறைவேறும். சகமாணவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவீர்கள். அவர்களிடம் அநாவசிய சண்டை, சச்சரவுகளைத் தவிர்க்கவும். உங்கள் உடல் நலம் நன்றாக இருக்கும். தினமும் உடற்பயிற்சிகளைச் செய்தால் மேலும் உடல் வலிமை பெறலாம்.

**விசாகம் 4 ஆம் பாதம்:** புதிய வேலை தேடுபவர்களுக்கு தாமதமானாலும் நல்லவேலை கிடைக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்பட்டாலும் மனதில் இறுக்கம் இருக்கும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும்.

**அனுஷம்:** குடும்பத்தில் வீண் வாக்குவாதம் ஏற்படும். பிள்ளைகள் மூலம் செலவு இருக்கும். அவர்களது முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பீர்கள். பயணங்கள் செல்ல நேரலாம். உறவினர்களிடம் வீண்வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. காரிய தாமதம் ஏற்பட்டாலும் சாதகமான பலன் கிடைக்கும்.

**கேட்டை:** உடல்நலக்கோளாறு நீங்கி சுகம் உண்டாகும். பணவரத்து கூடும். எதிர்ப்புகள் மறையும். பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்புக்கரம் நீட்டுவார்கள். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். வாக்குவன்மையால் காரியங்களில் அனுகூலம் ஏற்படும்.

**பரிகாரம்:** முடிந்த போதெல்லாம் அல்லது செவ்வாய்க் கிழமைகளில் மட்டுமாவது துர்க்கையம்மனை வழிபடவும். நவகிரகப் பிரதட்சிணம் செய்யுங்கள் நன்மைகள் பெருகும். ஶ்ரீதுர்கா சுக்தம் சொல்வது நன்மையைத் தரும். செம்பருத்தி மலரை அம்மனுக்கு ராகு காலத்தில் படைத்துவர மனதில் தைரியம் பளிச்சிடும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழேந்திரன்...

ரால் நேற்றுக் கைது செய்யப்பட்ட அவர் கொழும்பு - புதுக்கடை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது அவரை எதிர்வரும் முதலாம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

காணி ஒன்று தொடர்பில் 15 இலட்சம் ரூபாய் கையூட்டல் பெற்ற குற்றச்சாட்டில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் செயலாளர் உள்ளிட்ட இருவர் முன்னர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, குறித்த தொகை கையூட்டலை பெறுவதற்கு உதவி வழங்கிய குற்றச்சாட்டிலேயே முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## அதிகளவான...

உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையில் அதிகளவான போதைப்பொருளினை ஊசி மூலம் உடலில் ஏற்றியதால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,33,60)

## சிறீதரன் வெளி...

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல் நடந்து கொண்டிருக்கும்போது, அரசாங்க அதிகாரிகள் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில், பாராளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா அதிகாரிகளை இடைமறித்து கேள்விகளை கேட்டுக் கொண்டிருந்ததுடன் அவர்களை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டார் எனச் சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், அரச அதிகாரிகளை அவமதிப்பதை தான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

எனவே இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்கிறேன் என்று கூறி அங்கிருந்து வெளியேறினார். (ம-க)

## மகாதேவக்...

இணுவில் தர்மசாஸ்தா பீடத்தின் முதல்வரும் குருகுல அதிபருமாகிய வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ தானு. மகாதேவக்குருக்கள் நேற்றைய தினம் சிவபதமடைந்தார்.

'வாத்தியார்' என்று அந்தணச் சிவாச்சாரியர்களால் அழைக்கப்படும் சிவஸ்ரீ மகாதேவக்குருக்கள் வேத, ஆகமங்களில் விற்பன்னராகத் திகழ்ந்ததுடன் ஆலய மகா கும்பாபிஷேகங்களை நெறிப்படுத்தும் பெருமைக்குரியவர்.

இவரது சேவையைப் பாராட்டி யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழு யாழ்.விருதை வழங்கிக் கௌரவித்ததுடன் தருமை ஆதீனம் சிவாகம கலாநிதி எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கிணற்றிலிருந்து...

சடலம் காணப்பட்டதை அவதானித்த ஊர் மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் பெண்ணின் சடலத்தை மீட்டனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி க.கரிபிரசாத் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். (ம-7,250)

## அதிகம் கதைத்...

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்திலேயே மேற்கண்ட நிகழ்வு நடைபெற்றது.

பாலியாற்று குடிநீர்த் திட்டம் தொடர்பில் கலந்துரையாடல் நடந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் கருத்துக்கு எதிர்க் கருத்துத் தெரிவிக்கவே, கோபமடைந்த அர்ச்சுனா மேற்கண்டவாறு அவைத் தலைவரைப் பார்த்து விழித்தார்.

அதன் பின்னர் சற்றுநேரம் அமைதியாய் இருந்த சி.வி.கே.சிவஞானம் கூட்டம் நிறைவு பெறுவதற்கு முன்னரே அங்கிருந்து வெளியேறினார்.

## நிறுத்தப்பட்டது...

யில் சென்றிருந்தாலும் அதன்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அர்ச்சுனா, இளங்குமரன் ஆகியோருக்கிடையில் பல தரப்பட்ட முரண்பாடுகள் எழுந்த நிலையில் அபிவிருத்திக் குழுக் கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

கூட்டத்தின் ஆரம்பம் முதலே அதிகாரிகளைக் கேள்விக்கணைகளால் துளைத்துக் கொண்டிருந்தார் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா.

இச்சந்தர்ப்பத்தில் அரச அதிகாரிகளை அவமதிப்பதை கண்டித்த பாராளு மன்ற உறுப் பினர் சி.சிறீதரன் வெளிநடப்புச் செய்தார்.

இந்நிலையில் கூட்டம் தொடர்ந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் உச்சம் பெற்றது.

முகம்சுழிக்கும் வகையிலான வார்த்தைப் பிரயோகங்கள் பிரயோகிக்கப்பட்டன.

தொடர்ந்து சுமுகமாக்கி கூட்டத்தைத் தொடர்ந்த வேளை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் "யாழ்ப்பாண அபிவிருத்தித் திட்டம்" தொடர்பான முன்மொழிவு மேற்கொண்ட சந்தர்ப்பத்தில், பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மீண்டும் கேள்விகளைத் தொடுத்த நிலையில் அங்கு பெரும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

அபிவிருத்திக் குழுவின் தலைவர் அமைச்சர் இ.சந்திரசேகர் குறித்த சலசலப்பை அமைதியாக்கப் பல தடவைகள் முனைந்த போதிலும் அது தோல்வியில் முடியவே நிலைமை கட்டுப் பாட்டை மீறிப் போவதை உணர்ந்த அமைச்சர் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நிறைவுறுவதாக அறிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சந்திரசேகர், நிலைமை கைமீறிப்போகும் எனத் தாம் நினைக்க வில்லை.

சிவபூஜையில் கரடி பூந்தது போல சிலரின் அத்துமீறிய செயற்பாடுகள் எமது பிரதேசத்தின் அபிவிருத்தியையே பாதிக்கின்றது.

எனவே இனிவரும் காலங்களில் இவ்வாறான செயலுக்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் அரச அதிகாரிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மனம் வருந்துவதாகவும் தெரிவித்தார். (ம-க)

## சம்பள...

186 பக்கங்கள் கொண்ட இந்த சுற்றறிக்கையில் சம்பள முறை, ஓய்வூதிய மாற்றம், சம்பள மாற்ற அட்டவணை உட்பட சகல விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டும் இப்படி ஒரு சுற்றறிக்கை வெளியாகி அரசாங்க ஊழியர்களின் சம்பளம் 01.01.2016 முதல் ஐந்து கட்டங்களாக அதிகரிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.03.25
சீட்டிழுப்பு இலக்கம் 5786
C 6 5 2 5 5 2
அத சம்பத
C 2 5 5 2
சீட்டிழுப்பு இலக்கம் 0361
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.03.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1816
J 07 44 74 82 J
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Double Chance இலக்கம் 89588
தொலைபேசி : 011 468 7000 / 011 232 4324

மெகா பவர்
திகதி 25/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2134
R 23 11 17 28 59
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

NLB ஜய JAYA
திகதி 2025.03.25
சீட்டிழுப்பு இலக்கம் 054
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
K 2 8 5 7
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

கொவிசெத Govisetha
திகதி 25.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4028
E 04 06 16 24 E
ரூ.1,000,000/- அதிர்ஷ்ட இலக்கம் 608625
ரூ.100,000/- 25489

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.25
சீட்டிழுப்பு இலக்கம் 1095
விருச்சிகம் 01 16 26 36 விருச்சிகம்
78591 தேசிய லொத்தர் சபை 34

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.03.2025 வெற்றி வாரம் 494
ஆங்கில எழுத்து J
7 8 7 8 8 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.34,251,747.20
52864
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2760
சீட்டிழுப்பு திகதி 2025.03.25 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 29 50 61 78 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,110,140.80

சனிதா Shanida
திகதி 25.03.2025 வெற்றி வாரம் 4921
18 33 49 63 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,218,458.40
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 67326
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 650
சீட்டிழுப்பு திகதி 25.03.2025 செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 36 39 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
www.dlb.lk

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4472
சீட்டிழுப்பு திகதி 25.03.2025 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 29 44 46 50 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,285,947.60
185890

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 12 11 46 48 53
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1936
திகதி 25.03.2025 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.569,703,455.80
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2586
சீட்டிழுப்பு திகதி : 2025.03.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,779,939.20
03 21 60 63 F
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 735410


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

1. மட்டுவில் - மீசாலை, இந்து, 1985, கேட்டை, B.Eng, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
2. காரைநகர், இந்து, 1985, மகம், Qualified chartered Accountant UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
3. சாவகச்சேரி, இந்து, 1984, ரேவதி, MBBS, Dentist, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
4. வல்வெட்டி, இந்து 1986, Bachelor Degree in Business Management, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
5. அச்சுவேலி - புத்தூர், இந்து, 1986, Administration Professional, France Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
6. தெல்லிப்பளை - இருபாலை, இந்து, 1987, பூரட்டாதி, BSc(hons) in Quantity Surveying, Quantity Surveyor, Dubai மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
7. சங்கானை, இந்து, 1992, விசாகம், BA(hons) Accounting, Germany +UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
8. தெல்லிப்பளை, இந்து, 1988, உத்தரம், Phd, Civil Engineering, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
9. இணுவில் - உரும்பிராய், இந்து, 1989, பூசம், Masters, Financial Officer, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(C-2543)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728


## "அடேய்"...

யில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் அரச அதிகாரிகள் பேசும்போது, அவர்களை பேசவிடாது இடைமறித்து கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா.

ஆயினும் அதிகாரிகள் தங்கள் கருத்தைப் பேச விடும்படி அமைச்சர் சந்திரசேகர் அர்ச்சுனாவிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

தொடர்ந்து அர்ச்சுனா அவ்வாறு செயற்படவே ஒரு கட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் அர்ச்சுனாவுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார்.

அதன் பின்னரும் கலந்துரையாடலைத் தொடர முடியாதபடி அர்ச்சுனா கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கவே அமைச்சர் கோபங்கொண்டு "அடேய்" நான் கூறுவது உங்களுக்குப் புரியவில்லையா என விழித்தார்.

இதற்குப் பதிலளித்த அர்ச்சுனா, இதுதான் உங்கள் தேசிய மக்கள் சக்தியின் உண்மை முகம். என்னைப் பாராளுமன்றிலும் பேச விடுகிறீர்கள் இல்லை. இப்போது இங்கும் பேச விடுகிறீர்கள் இல்லை என தனது கருத்தை முன்வைத்தார்.

குறித்த நிகழ்வு அங்கு பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (ம-க)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2536)

076 825 7716 (ஆகாஸ்)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் லிங்கம் கூல்பார் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
ஆண்/ பெண் இருபாலாரும்.

- சிற்றுண்டி பரிமாறுபவர் (Supplier)
- காசாளர் (Cashier)
- சிட்டை எழுதுநர் (Bill Clark)
- துப்பரவு பணியாளர் (Cleaner)

தொடர்புகொள்ள வேண்டிய நேரம் : காலை 9.00 - மாலை 5.30 மணிவரை

(3728)

லிங்கம் கிறீம் ஹவுஸ்
340c, பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம். 077 711 1410

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2537)

வணிக முகாமைத்துவ பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு

## Business Management Training

எமது வணிக நிறுவனத்திற்கு 16 - 35 வயதிற்கு உட்பட்ட இளைஞர், யுவதிகளை

- வரவேற்பாளர்
- கணக்காளர்
- முகாமைத்துவ உதவியாளர்
- நிர்வாக உதவியாளர்
- மேற்பார்வையாளர்
- உதவி முகாமையாளர்

மேல்வரும் பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்ய இணைக்கவுள்ளோம். (961)

தொடர்புகளுக்கு : 076 740 9624, 072 011 2170

A/L ICT வகுப்புக்கள் திரு.இ.குமரன்

## A/L 2027 ஆரம்பம்

ஞாயிற்றுக்கிழமை 30.03.2025 5 pm

திரு.இ.குமரன் A/L ICT

100% Practical-Oriented Class
Mr.R.Kumaran-B.Sc.

- Computer Lab
- Study Guide
- Unit Exam
- Past Papers
- Revision

ICT துறையில் 23 வருட கற்பித்தல் அனுபவம் (962)

MIS ICT COLLEGE TP:0776577359,#74, Sabapathy Lane, Jaffna. தலையாழி, பிரம்படி

# NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD, JAFFNA

## 2027 A/L கணித உயிரியல் பிரிவுகள்

நேரடி வகுப்புக்கள் மற்றும் நிகழ்நிலை வகுப்புக்கள்

**தமிழ்மொழி மூலம்**

PHYSICS
திரு. G.பிரபா
திரு. N.கபிலன்
திரு. R.ராகுலன்

CHEMISTRY
திரு. G.BENO
திரு. V.K.நந்தா

BIOLOGY
திரு. K.இராகவன்
திரு. R.குகானந்தன்

COM.MATHS
திரு. P. செந்தில்நாதன்
திரு. V.S. சிவகரன்

**ENGLISH MEDIUM**

PHYSICS
MR.M.KUGANESWARAN

CHEMISTRY
MR.G.BENO

BIOLOGY
MR.V.S.GUNASEELAN

COM.MATHS
MR.P.SENTHILNATHAN
MR.V.S.SIVAKARAN

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(C-2538)

ஆரம்பம் : 30.03.2025 (SUNDAY) 9.15 AM

நிகழ்நிலை வகுப்புகளுக்கு சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்...

தொடர்புகளுக்கு : 076 566 3006, 076 569 3006, 077 791 7611

f https://facebook.com/New Science hall


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.